JAC JOSHAM

# JAC JOURNAL OF SCIENCE, HUMANITIES AND MANAGEMENT

Vol.2, No.2 June 2015 ISSN 2347-9868

Published by
**JAYARAJ ANNAPACKIAM COLLEGE FOR WOMEN (Autonomous)**
Accredited with 'A' Grade (3rd Cycle) by NAAC
Affiliated to Mother Teresa Women's University, Kodaikanal
PERIYAKULAM - 625 601, TAMIL NADU
www.annejac.com

10. **Green Synthesis of Silver Nanoparticles using Different Ornamental flower Extracts and their Antimicrobial Activty** 99
*Divya. P and Nithya .T*

11. **புதினங்கள் காட்டும் இயற்கைக்குத் திரும்பும் முறைகள்** 111
ஜெ. அருள் இருதய ஜெயந்தி,

12. **தேம்பாவணி காப்பியத்தில் எண்வகையான மெய்ப்பாடுகள்** 116
தே. ராஜசீலி

13. **Evaluation of Phyotochemical Constituents of *Andrographis Paniculata* Extracts** 121
*Geetha, I and Catherine P Alexander, S*

# புதினங்கள் காட்டும் இயற்கைக்குத் திரும்பும் முறைகள்

ஜெ.அருள் இருதய ஜெயந்தி,

தமிழ்த்துறை,
ஜெயராஜ் அன்னபாக்கியம்
மகளிர் கல்லூரி (தன்னாட்சி), பெரியகுளம்.

## 1.முன்னுரை:

மனிதனுக்கு இயற்கை பல விதங்களில் உதவுகிறது. மனிதனுக்காகப் படைக்கப்பட்ட அது மனிதனையும் தன்னகத்தே அடக்குவதாகிறது. ஆனால் மனிதனோ தனது தன்னலத்தின் பொருட்டு இயற்கையைச் சுரண்டுகிறான், பாழ்படுத்துகிறான். மனிதனது இச்செயல் அவனுக்கே எதிராகிறது. பல இன்னல்களை ஏற்படுத்துகிறது. இதை உணர்ந்த மனிதன் ஒரு கால கட்டத்தில் இயற்கைக்குத் திரும்புகிறான். அவன் இயற்கைக்குத் திரும்பும் முறைகளை தமிழ்ப்புதினங்களான ‘அடவி’, ‘உயிர்த்தேன்’ ‘ரப்பர்’, ‘மண்’ போன்றன எண்பிக்கின்றன.

## 2. புதினங்கள் காட்டும் இயற்கைக்குத் திரும்பும் முறைகள்:

கானகத்திற்குத் திரும்புதல், கிராமத்திற்குத் திரும்புதல், விவசாயத்திற்குத் திரும்புதல், பகை உறவை ஏற்பதன் மூலம் இயற்கைக்குத் திரும்புதல் போன்ற வழிகளில் மனிதன் இயற்கைக்குத் திரும்புகிறான்.

### 2.1 கானகம் செல்வதன் மூலம் இயற்கைக்குத் திரும்புதல்:

வாழ்க்கையில் ஏற்பட்ட ஏமாற்றங்கள், வேதனைகள் காரணமாக மக்கள் புகலிடம் தேடுவது இயல்பு. பண்டைய நூல்கள் மக்கள் தங்கள் கடமையை முடித்த பிறகு கானகம் சென்று வாழ்ந்ததைக் கூறுகின்றன. “இந்த உலக வாழ்க்கை போதும் என்று கருதுகிறேன். என்னிடம் இருப்பதையெல்லாம் உன்னிடம் கொடுத்துவிட்டு கானகங்களுக்குப் போய் என்னை நானே உணர முற்படுகிறேன்” (அடவி ப.111) என்று யாக்ஞவல்கியர் தன் மனைவி மைத்ரேயிடம் கூறியதாகக் கதை உண்டு. அவ்வாறு மன அமைதியினைத்தரும் காடு,மனிதனுக்கு ஆறுதலைத் தருகிறது. தன் துயரத்திற்கு வடிகாலாகப் பெண் ஒருத்தி காட்டிற்குச் செல்வதை அம்பையின் ‘காட்டில் ஒரு மான்’ தொகுதியில் உள்ள ‘அடவி’ எனும் குறும்புதினம் கூறுகிறது.

செந்திரு எனும் பெண்,தன் கணவனது வியாபாரத்தில உறுதுணையாக இருக்கிறாள்.மசாலாப் பொடி வியாபாரத்தில் இருந்து பட்டுத்துணி,ஆயத்த ஆடைகள் என்று அதனைப் பலவாறு விரிவடையச் செய்து அவள் கணவனான திருமலையுடன்

அயர்வின்றி உழைக்கிறாள்.தோல்பை, பெட்டி, கைப்பை, தோள்பை சில்லறை வைக்கும் சிறு பை என்று இவளாகவே முன் நின்று வியாபாரத்தை வளப்படுத்துகிறாள்." ஓட்டப்பந்தயத்தில் எல்லையைத் தொட ஓடுவதுபோல் வியாபாரக் காட்டினுள் ஓட்டம் ஒரு பதினான்கு ஆண்டுகள். கனடா வரை எட்டியாகி விட்டது. முற்றிலும் வேறுபட்ட தோல் வியாபாரத்தில் கடந்த எட்டு ஆண்டுகள்" (கா.ஓ.மா. பக்.152) எனும் புதினப்பகுதி, செந்திரு தன் வாழ்வின் பெரும்பான்மையான காலத்தை வியாபாரத்திற்காகச் செலவழித்ததைக் கூறுகிறது. வியாபாத்தில் இவளைச் சமபங்குக் கூட்டாளியாக்குவது தான் நீதி. ஆனால், அவள் கணவனின் வியாபாரக் கூட்டாளிகள் செந்திருவை தொழில் பங்காளியாகக் சேர்க்க மறுக்கின்றனர். இதற்குக்காரணம் பாலின வேற்றுமை உணர்வே. வியாபாரத்தின் ஒவ்வொரு நிலையிலும் மூலைக்கல்லாகச் செயல்பட்ட அவளுக்கு உரிமை மறுக்கப்படுகிறது. கணவனால் எதையும் செய்ய முடியாத நிலை உண்டாகிறது. இங்ஙனம் புறக்கணிக்கப்பட்ட வேதனை காரணமாக, அவள் தனித்து வனப்பகுதிக்குச் செல்ல முடிவெடுக்கிறாள். வாகன ஒலிகள், பேச்சொலிகள், நடைஒலிகள், வீடுகளில் இயங்கும் மின்கருவி ஒலிகள் எல்லாவற்றையும் விட்டுக் காட்டிற்குச் செல்கிறாள். வன இலாகா அதிகாரியைத் தொடர்பு கொண்டு காட்டில் உள்ள அரசு விருந்தினர் விடுதியில் தங்க அனுமதி பெறுகிறாள். கணவன் தடுத்தும் அங்கு செல்கிறாள். வனத்தில் தங்கி இயற்கையின் எழிலில் தன்னை மறக்கிறாள். படைப்பாற்றலிலும் அதைத் தூண்டும் இயற்கையிலும் தன்னை அழுத்தும் மனச்சோர்வுக்கு வடிகால் காணுகிறாள்.

### 2.2 கிராமத்திற்குத் திரும்புதல்:

இயற்கையின் ஒட்டு மொத்த உருவமே கிராமத்தில் தான் அடங்கியுள்ளது. வயல்களும், குளங்களும்,ஆறுகளும் கிராமத்தின் கண் அமைந்து அதற்கு வலிமை சேர்க்கின்றன. நகர வாழ்க்கையில் தன் வாழ்நாளைக் கழித்த மனிதன் தன்னுடைய இறுதி நாட்களில், கிராமத்திற்கு வந்து தங்குவது அவனுக்கு நிம்மதியைத் தருகிறது; ஓய்வை அளிக்கிறது; பல சமுதாயப் பணிகளை ஆற்ற வழி உண்டாகிறது. தி.ஜானகிராமனின் 'உயிர்த்தேன்' எனும் புதினம்,மனிதன் கிராமத்திற்குத் திரும்புவதைக் கூறுகிறது. நகர வாழ்க்கையில் நிம்மதியை இழந்த 'பூவராகவன்' என்பவன் இறுதியில் தன் குடும்பத்துடன் தன் சொந்தக் கிராமமான 'ஆறுகட்டியை' வந்தடைகிறான். நகர வாழ்வின் நெருக்கடியிலிருந்து வெளியேற வேண்டும் என்ற அவனது மனநிலைக்கு, கிராமம் புகலிடம் தருகிறது.நகர வாழ்க்கை என்பது, ஒரு இயந்திர வாழ்க்கையாக உள்ளது. அங்கு அவசரம் தான் நிலவுகிறது. ஓடுவதும் சம்பாதிப்பதும் செலவு செய்வதுமே கடமை என்று கருதப்படுகிறது. ஆனால் கிராமப்புறங்களில் அவ்வாறு அமைவதில்லை. அவர்களும் வாழ்ந்து கொண்டிருக்கின்றனர். வருகிற வருமானத்தில்

குடும்பம் நடத்துகின்றனர். அது வேண்டும் இது வேண்டுமென்று ஆசைப்படுவதில்லை. அத்தகைய சிறப்பு வாய்ந்த கிராமத்திற்குப் பூவராகவன் திரும்புகிறான்.

## 2.3 விவசாயத்தை ஏற்பதன் மூலம் இயற்கைக்குத் திரும்புதல்:

மனிதன் செல்வத்தைப் பெருக்கப் பணப்பயிர்களைப் பயிரிடுகிறான் அப்பணப்பயிர், தனக்குச் செல்வத்தை அள்ளித்தரும் என்று ஆவல் கொள்கிறான். ஆனால் செல்வத்தோடு அவனுக்கு நெருக்கடிகளும் ஏற்படுகின்றன. 'ரப்பர்' புதினத்தில் இரப்பர் ஏற்றுமதி தொடர்பான அதிகார அமைப்புக்கு வரியாகவும், கையூட்டாகவும் மிகுந்த தொகை செலவழிக்க வேண்டியுள்ளது. இதனால் செல்லையாப் பெருவட்டரின் குடும்பத்திற்கு இழப்பு ஏற்படுகிறது. தொடர்ந்து ரப்பரை ஏற்றுமதி செய்ததால் பொருள் இழப்பு மிகுதியாகிறது. "கேரள ரப்பர் போர்டு மறுபிறவி எடுத்த கணம் முதல் ரப்பர் விலை எகிற ஆரம்பித்து விட்டிருந்தது. எல்லா வழிகளிலும் சுவர்கள்" (ரப்.ப.151) எனும் புதின வரிகள், இரப்பர் தொழிலுக்கேற்பட்ட நெருக்கடியினை உணர்த்துகின்றன. இதனாலேயே செல்லையாப் பெருவட்டரின் மூத்தமகனான பிரான்சிஸ் சிந்திக்க ஆரம்பிக்கிறான். விவசாயத்தின் மேன்மையினை உணர்கிறான். "கிருஷி"ல இருக்கிற சொகம் தெரிஞ்சா விடமாட்டே" (ரப்.ப.31) என்று தாத்தா பொன்னுப் பெருவட்டர் கூறுவதிலிருந்து 'கிருஷி' எனும் விவசாயத்தின் அருமை பிரான்சிஸைப் போலவே நமக்கும் புரிகிறது. அவன் விவசாயத்திற்குத் திரும்ப முழுமனதோடு இசைகிறான். தி.ஜானகி ராமனின் 'உயிர்த்தேன்' புதினத்தில், பூவராகவன் முதலில் ஊரிலுள்ள கோயிலைச் செப்பனிட எண்ணுகிறான். செங்கம்மா என்பவளின் ஆலோசனையின்படி ஊரில் உள்ள தரிசுபட்டுப்போன நிலங்களைத் தன் செலவில் செப்பனிடுகிறான். மண்ணைச் சோதித்து உரமிடுகிறான் புது விதை வாங்குகிறான் தன் வயலுக்குச் செய்யும் எல்லாச் சோதனை முயற்சிகளையும் அனைவருக்கும் சேர்த்துச் செய்கிறான் இவ்வேலைகளைக் கவனிக்க பொன்னுச்சாமி என்பவரை நியமிக்கிறான். அவ்வுழைப்பில் காணும் பயனால் நிறைவெய்துகிறான். 1967ஆம்ஆண்டில் இப்புதினம் எழுதப்பட்டுள்ளது. இக்காலகட்டத்தில் இப்புதினம் எழுதப்பட்டிருக்குமானால் போடப்பட்ட உரம், இயற்கை உரம் என்று படைப்பாளர் எழுதியிருக்கக்கூடும்.

## 2.4 பிற உயிர்களை ஏற்பதன் மூலம் இயற்கைக்குத் திரும்புதல்:

மனிதன், தான் வாழ வேண்டிக் காட்டை அழித்து, விலங்குகளை விரட்டி, இயற்கையுடனான தனது உறவைப் பகை உறவாக்கி, அதன் விளைவுகளால் தாக்குண்டு, பிறகு தன் தவறை உணர்ந்து, பிற உயிர்களை ஏற்பதன் மூலம் இயற்கைக்குத் திரும்புகிறான். இதை ஜெயமோகனின் 'மண்' எனும் குறும் புதினம் கூறுகிறது. இதில் வருகின்ற மூப்பன், வேற்றினத்து மக்களால் விரட்டப்பட்டுத் தன்

சுற்றத்துடன் காட்டிற்குள் புகுந்து அக்காட்டையே தன் இருப்பிடமாகக்கொண்டு யானைக் கூட்டத்தை விரட்டிக் குடியேறுகிறான். மூப்பனுக்கும், 'ஒற்றைக் கொம்பன் வனராசன்' எனும் யானைக்கும் பலகாலமாகத் தொடர்ந்து தீராத சண்டை நடக்கிறது. அதில் 'ஒற்றைக்கொம்பன் யானை' விரட்டியடிக்கப்படுகிறது .யானை வம்சம் நொடித்துப் போகிறது. மூப்பனும் அவன் கூட்டத்தாரும் அங்கே நிலையாகக் கால் கொண்டு, அங்குள்ள மரங்களை எல்லாம் வெட்டிச்சாய்த்துப் பொருட்கள் செய்து அந்த வியாபாரத்தால் மேல் நிலையை அடைகின்றனர். அவர்கள் நூறு ஆண்டுகளுக்கும் மேலாக மரத்தை வெட்டியதால் காடு குறைகிறது. புற்கள் காய்கின்றன. சமவெளிகள் மொட்டையாக்கப்படுகின்றன. காட்டு நதிகள் வற்றி விடுகின்றன. இறுதியில் உணவுக்கும் நீருக்கும் மக்கள் தவிக்கும் அளவிற்கு வறுமை அவர்களைச் சூழ்கிறது. உணவு இன்மையால் அனைவரும் ஊரை விட்டு வெளியேறுகின்றனர். மூப்பன் அவ்விடத்தை விட்டு நகர மறுக்கிறான். மூப்பனின் கொள்ளுப்பேரனின் மகன் தன்னுடைய குழந்தைகள் உணவில்லாமல் இறப்பதைக் கண்டு எஞ்சிய குழந்தைகளையாவது காப்பாற்ற வேண்டும் என்ற எண்ணத்தில் நூற்றைம்பது வயதான தன் மூத்தோனைத் தனியே விட்டு விட்டுப் பிழைப்புக்காக வெளியூர் செல்கிறான். ஊரில் மூப்பன் மட்டும் தனியாக இருக்கின்ற நிலையில், தன்னை வருத்திய கடும் தாகத்தினால் ஊர்ந்து ஊர்ந்து கிணற்றடிக்குச் செல்கிறான். அக்கிணற்றில் இருக்கிற சேற்றுத் தண்ணீரைப் பருக அவன் கயிற்றுடன் கூடிய தகரப் போணியை எடுத்துக் கயிற்றின் நுனியைத் தரை மீது போட்டு அதன் மீது அமர்ந்து கொண்டு, போணியைக் கிணற்றை நோக்கி வீசுகிறான். இதில் தோல்வி அடைந்த அவன் மீண்டும் முயற்சி செய்கிறான். தகரப் போணி சேற்று நீரில் அமிழ்ந்தது. மூப்பன் கயிற்றை இழுத்து அதை வலக்காலால் மிதித்தப்படி கயிற்றை மீண்டும் இழுக்கிறான். அதில் அரைப்போணி வண்டல் நீர் இருக்கிறது. அதை அவன் குடிக்கப் போகும் நேரத்தில் கூரிய சீறல் ஒலி அவன் காதில் மோதுகிறது. நூறு ஆண்டுகளுக்கு மேலாக மூப்பனால் பகைக்கப்பட்டு விரட்டப்பட்ட 'ஒற்றைக் கொம்பன் வனராசன்' எனும் யானை அவனுக்கு அருகாமையில் நிற்கிறது. அதன் புழுதி படிந்த, வாடி வருந்திய, எலும்பும் தோலுமான தோற்றம் அதுவும் வறட்சியால் நலிந்து தண்ணீருக்காய்த் தவிப்பதை உணர்த்துகிறது. மூப்பன், போணியில் இருந்து சிறிதளவு தண்ணீரை, தான் தாகமாக இருப்பினும் அதற்கு அளிப்பதாகக் கதை முடிகிறது. இதை "அவன் (மூப்பன்) சிரித்தான். பதறும் கரங்களினால் போணியைக் கொம்பனை நோக்கி நகர்த்தினான்" (மண்.ப.210) என்று புதினம் காட்சிப்படுத்துகிறது. வளத்தைத் தேடும்போது இயற்கைக்கும் மனிதனுக்கும் உள்ள உறவு பகை உறவாகிறது. வறட்சி ஏற்படும்போது, ஒரு உயிர் இன்னொரு உயிரை உணர்ந்து கொள்கிறது; ஏற்கிறது. இவ்வகையில், மனிதம் மாண்புறுவதாகப் படைப்பாளர் படைத்துள்ளார்.

3. தீர்வுகள்:

- இயற்கையின் கூறுகள் செறிந்துள்ள கானகம்; கிராமம் என்பன இயற்கைக்குத் திரும்பும் மனிதன் தேடிச் செல்லும் களங்களாகின்றன.
- மனிதன் இயற்கைக்குத் திரும்பியவுடன், கிராமத்து நல் உள்ளங்களை அறிந்துகொள்கிறான். நல் இயல்புகள் வளர்கின்றன. மனிதர்களுக்கிடையே ஒருமைப்பாடும் அதனோடு கூடவே சமூக வளர்ச்சியும் ஒருங்கே உண்டாகின்றன. இவற்றால் மனம் அமைதியும், நிறைவும் பெறுகிறது.
- வளத்தைத் தேடும்போது இயற்கைக்கும் மனிதனுக்குமான உறவு பகையாகிறது. வறட்சி அந்நிலையை மாற்றி, ஒரு உயிரின் துன்பத்தை மற்றொரு உயிர் உணர்ந்து கொள்ளச் செய்கிறது.

4. துணைநின்ற நூல்கள்


1. அம்பை - காட்டில்ஒருமான்,
   காலச்சுவடு பதிப்பகம்,
   நாகர்கோவில், முதற்பதிப்பு 2000.

2. ஜெயமோகன் - ரப்பர்,
   கவிதா பப்ளிகேஷன்ஸ்,
   சென்னை, மூன்றாம் பதிப்பு,ஏப்ரல் 2002.

3. ஜெயமோகன் - ஜெயமோகன் குறுநாவல்கள்,
   உயிர்மைபதிப்பகம்,
   சென்னை, முதற்பதிப்பு, திசம்பர் 2004.